விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 337 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 05 திங்கட்கிழமை (21.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

மாவீரர் வாரம்

## யாழ்.பல்கலையில் ஏற்பாடுகள் பூர்த்தி



11

## வடக்கில் பாரிய பசுமைத் திட்டங்கள், நீர் முகாமைத்துவக் கட்டமைப்புக்கள்

### ஆரம்பிக்க ஜனாதிபதி நடவடிக்கை

(மன்னார்)

புவி வெப்பமயமாதலின் தாக்கத்தை குறைப்பதற்காக வடமாகாணத்தில் பாரிய பசுமை ஹைட்ரஜன் திட்டம், மேம்படுத்தப்பட்ட நீர் முகாமைத்துவக் கட்டமைப்பு மற்றும் மீள் காடு வளர்ப்புத் திட்டம் என்பவற்றை ஆரம்பிப்பது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்க அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். 02



# மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த மாவீரர்களை நினைவுகூரும் மாவீரர் தின அனுஷ்டிப்பு வாரம் இன்று 21ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.**



விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தனது இன்னுயிரை போராட்டக்களத்தில் தியாகம் செய்த முதலாவது மாவீரர் சங்கரின் நினைவாக, அவர் உயிரிழந்த கார்த்திகை 27ஆம் திகதி, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனினால் மாவீரர் தினமாக 1987ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது.

அன்றிலிருந்து தமிழர் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் 11

## நீரில் மூழ்கி யுவதி மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கற்கோவளம் கடலில் குளித்த யுவதி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பாரதிபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த ஆனந்தராசா 11

## மூச்சுத் திணறல்; பெண் சிசு பலி


(சாவகச்சேரி)

சாவகச்சேரி - கிராம்புவில் பகுதியைச் சேர்ந்த பிறந்து 54 நாட்களேயான பெண் சிசு ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை திடீர் மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்துள்ளது.

குழந்தைக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்ட நிலையில் பெற்றோர் உடனடியாக வைத்திய சாலைக்கு அழைத்து வந்த போதிலும் 11

## நாடு திரும்பிய பசிலால் எந்தப் பயனும் இல்லை

### எதிர்க்கட்சி



(கண்டி)

பசில் ராஜபக்ஷ மீண்டும் இலங்கை திரும்பினாலும் நாட்டுக்குள் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க 11

## தமிழ்க் கட்சிகளின் கூட்டம் வியாழனன்று

(கொழும்பு)

தமிழர்களின் அபிலாஷை சமஷ்டி முறையிலான தீர்வு தான் என்பதை தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒரே குரலில் வலியுறுத்துவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைத்துள்ள கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை மாலை கொழும்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் வீட்டில் நடைபெறும் எனத் தெரிகின்றது.

முன்னர் ஒழுங்கு 11

## ஹெரோயினுடன் மூவர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் 500 மில்லிக் கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் நேற்று மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்கு 11

## இளவாலையில் கஞ்சாவுடன் இருவர் கைது

(அராலி)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரியவெளி வீதியில் சிறிய அளவு கஞ்சாவுடன் இருவர் நேற்று கைது செய்யப்பட் 11

## கடல் அலையில் சிக்கி இளைஞன் மாயம்

### முல்லைத்தீவில் சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சாலை கடனீரேரியில் இறால் பிடிக்கச் சென்ற இளைஞன் கடல் அலையில் சிக்கி காணாமல் போயுள்ளார்.

கடல் நீரேரியில் நேற்றுக் காலை இறால்பிடிக்கச் சென்ற இளைஞன் ஒருவர் நீரேரியில் சிக்குண்டு 11

## 120 மில்.ரூபாய் மோசடி யாழில் சகோதரிகள் கைது


(யாழ்ப்பாணம்)

நிதி மோசடி குற்றச்சாட்டில் இரு பெண்கள் நேற்று ஞாயிற்றுக் கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

நோர்வேயில் உள்ள இலங்கையர் ஒருவரிடம் 23 வங்கிக் கணக்குகள் ஊடாக 120 மில்லியன் ரூபாய் நிதியை மோசடி செய்த குற்றச்சாட்டில் இரண்டு பெண் சகோதரிகள் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 19 . 01 . 1937

மறைவு 26 . 11 . 2016

அமரர்

## கிட்டிணன் பொன்னையா

திதி : கார்த்திகை அபரபக்க திரயோதசி

ஆண்டு ஆறென்ன ஆயிரம் தான் ஆனாலும்
ஆறாது எங்கள் துயர் காயாது எங்கள் கண்ணீர்
நீங்கள் அணைந்திட்ட நாள் முதலாய்
இன்று வரை உங்கள் நினைவுகள் நிழலாடுகின்றன.

உண்மைதானா இதுவென்று - எம்
உள்ளுணர்வு மறுக்கின்றது.
அன்பு கொண்ட உம் வதனம் - என்றும்
எம்மோடு இருப்பது போல் உணர்கின்றோம்.
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நீங்காது உங்கள் நினைவுகள்.

கூவில், புலோலி தென்மேற்கு,
புலோலி.

(13523)

குடும்பத்தினர்

## வடக்கில்...

மன்னார், தம்பபவனி காற்றாலை மின்உற்பத்தி நிலையத்திற்கு நேற்று கண்காணிப்பு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி, இந்நாட்டு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய முன்னேற்றம் மற்றும் அடுத்த பத்து ஆண்டுகளுக்கான திட்டங்கள் தொடர்பாகவும் இதற்குப் பொறுப்பான நிறுவனமான இலங்கை மின்சார சபை மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அதிகார சபையுடனான கலந்துரையாடலின் போது இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

புதுப்பிக்கத்தக்க வலு சக்தித் திட்டங்கள் மற்றும் ஹைட்ரஜன் திட்டங்களுக்கு விரைவாக மாற வேண்டியதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி, இங்கு வலியுறுத்தினார்.

கொழும்பு, ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை துறைமுகங்களில் பசுமை ஹைட்ரஜன் தொழில்நுட்பத்தை எதிர்காலத்தில் முன்னெடுக்கவும் மீன்பிடி படகுகளுக்கான பசுமை ஹைட்ரஜன் வலுசக்தி முறையை உடனடியாக அறிமுகப்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திலும் வடக்கின் பொருளாதாரத்திலும் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (4-7)

## 120 மில். ரூபாய்...

நாவந்துறைச் சேர்ந்த 30 மற்றும் 34 வயதுடைய இரு சகோதரிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 17ஆம் திகதி கைது செய்யப்பட்ட இருவரையும் 18ஆம் திகதியன்று யாழ் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, அவர்களை டிசெம்பர் 1 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (4-7)

# துயர் பகிர்கின்றோம்



மண்ணில் 1944.02.17

விண்ணில் 2022.11.20

எமது பாடசாலையில் ஆசிரியராகக்
கடமையாற்றும் திரு. **இன்பகுமார் குருஸ்**
அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்


## சவரியப்பு செல்வம் குருஸ்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(13519)

# மரண அறிவித்தல்



மண்ணில் 01 – 11 – 1975

விண்ணில் 20 – 11 – 2022

## திருநாவுக்கரசு புவனேந்திரன்

விசுவமடுவைப் பிறப்பிடமாகவும் பலாலி கிழக்கு வயாவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு புவனேந்திரன் நேற்று (20.11.2022) ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு - பரிமளம் தம்பதியரின் மூன்றாவது மகனும் பலாலியைச் சேர்ந்த செல்லப்பா(அமரர்) - செல்லம் தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மாவதி அவர்களின் அன்புக் கணவரும் கோகுல், சிவா, சுதா ஆகியோரின் சகோதரனும் டிலக்ஷன் (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி- மாணவன்), சஞ்ஜீவன் (யா/ இந்துக் கல்லூரி- மாணவன்) ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 21.11.2022 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பலாலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(13524)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 24.10.2022 அன்று இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் சின்னத்துரை சிவராசா
## (பாஞ்சான் துரை)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 21.11.2022 திங்கட்கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து 23.11.2022 புதன்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடைக்குறிச்சி,
வரணி

இங்ஙனம்
குடும்பத்தினர்

(C-5299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மத்திய கல்லூரியில் 50 இலட்சங்கள் பெறுமதியான 25, க.பொ.த.(உ/த)-2024 மாணவர்களுக்கான புலமைப்பரிசில்

## Rupees 50 Lacks Valued Scholarship for 25 Students of A/L-2024 at JCC

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - ஐக்கிய இராச்சியம் மற்றும் யாழ். மத்திய கல்லூரி 1987 ஆம் ஆண்டு உயர்தர பிரிவு மாணவர்கள் அமைப்பு இணைந்து வழங்கும் 50 இலட்சம் ரூபாய்கள் பெறுமதியான புலமைப்பரிசில் திட்டம்.

**விண்ணப்பிக்க தகுதியுள்ள மாணவர்கள்**

**வகை1: யாழ்.மத்திய கல்லூரி அல்லாத வேறு பாடசாலை மாணவர்கள்**

க.பொ.த.(சா/த)-2021 இல் குறைந்த பட்சம் 6A விசேட சித்திகளைப் பெற்று யாழ்.மத்திய கல்லூரியில் க.பொ.த.(உ/த)-2024 கற்கைநெறிக்கு தம்மை இணைத்துக் கொள்ளும் மாணவர்கள்.

வழங்கப்படும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை: 10 (பத்து மாணவர்கள்)

புலமைப்பரிசில் நிதி வழங்குநர் : யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர்சங்கம்-ஐக்கிய இராச்சியம் (JCC OBA-UK)

**வகை 2: யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள்**

க.பொ.த.(சா/த)-2021 இல் குறைந்த பட்சம் 6A விசேட சித்திகளைப் பெற்று தொடர்ந்தும் இக் கல்லூரியில் க.பொ.த.(உ/த)-2024 கல்வியை கற்க விரும்பும் யாழ்.மத்திய கல்லூரி மாணவர்கள்.

வழங்கப்படும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை: 15 (பதினைந்து மாணவர்கள்)

புலமைப்பரிசில் நிதி வழங்குநர் : யாழ்.மத்திய கல்லூரி 1987 உயர்தர பிரிவு மாணவர்கள் அமைப்பு (JCC-1987 A/L Batch)

மேற்படி கல்வித்தகைமையுடன் விளையாட்டுத்துறையில் சாதனை புரிந்த மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**மொத்த புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை -25**

**புலமைப்பரிசில்களின் பெறுமதி**

தலா ஒரு மாணவனுக்கு 2 இலட்சம் ரூபாய்கள் வீதம் 25 மாணவர்களுக்கு மொத்தம் 50 இலட்சம் ரூபாய்கள் புலமைப்பரிசில் வழங்கப்படும்.

**புலமைப்பரிசில் வழங்கப்படும் முறை**

மாதந்தோறும் ரூ.7000.00 ப்படி 28 மாதங்களுக்கு வழங்கப்படும். மேலும் ஒவ்வொரு தவணைப்பரீட்சை பெறுபேறுகளை இறுதி பரீட்சை வரை ஒழுங்காக எமக்கு சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒரு தடவை மாத்திரம் ரூ.4000.00 வழங்கப்படும்.

**புலமைப்பரிசிலின் நோக்கம்**

க.பொ.த.(உ/த) - 2024 பரீட்சையில் 3A விசேட சித்திகளை பெறுதல்.

**மேலதிக விபரங்களுக்கு:** திரு.ம.வித்தியானந்தநேசன் President JCCOBA 0777642379
திரு. மு.இராஜவரோதயம் Secretary JCCOBA 0776057836
திரு.அ.கபில்நேசன் Treasurer JCCOBA 0778469025
E-mail address:JccScholarship@gmail.com

"Central's Flag must never be lowered"

(c-5296)

**யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்- 2022**

# பயங்கரவாத தடைச்சட்டத்தால் பாதிக்கப்படுவது தமிழ், முஸ்லிம் மக்களே

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிரயோகத்தை நிறுத்துவதற்கான நியாயமான நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.**

அத்தோடு அதற்குப் பதிலாக உருவாக்கப்படும் புதிய சட்டமும் சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு உட்பட்டவையாக அமைய வேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தச் சட்டத்தின் பிரயோகத்தினால் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் தமிழ், முஸ்லிம் மக்கள் அல்லது அரசாங்கத்தை விமர்சிப்பவர்களாகவோ இருக்கின்றார்கள் என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நீக்குவதாக வாக்குறுதியளித்த ரணில் விக்கிரமசிங்க, தனது அதிகாரத்தை பயன்படுத்தி மாணவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைப்பதற்கு உத்தரவிட்டிருப்பது குறித்தும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

எனவே, பயங்கரவாத தடைச்சட்டத்தின் பிரயோகத்தை இடைநிறுத்துவதற்கான நியாயமான நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.(நி)

# நாடு திரும்பினார் பசில்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷ அமெரிக்காவில் ஒன்றரை மாதங்களைக் கழித்த பின்னர் நேற்று காலை நாடு திரும்பியுள்ளார்.

மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையடுத்துப் பதவிகளிலிருந்து ராஜபக்ஷர்கள் விரட்டியடிக்கப்பட்ட பின்னர் இரட்டைக் குடியுரிமையுள்ள பசில் ராஜபக்ஷ அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார்.

இந்நிலையில் பசில் ராஜபக்ஷவின் வருகையைத் தொடர்ந்து எதிர்வரும் தேர்தலுக்கான தமது கட்சியின் திட்டங்களை விரைவில் [illegible]



முறைப்படுத்த எதிர்பார்ப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். (நி)

# மனிதக் கடத்தலில் ஈடுபட்ட மற்றுமொருவர் கைது

(கொழும்பு)

ஓமானுக்கு இலங்கையிலிருந்து ஆட்களை கடத்திய குற்றச்சாட்டில் மற்றுமொரு சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவிசாவளை பகுதியில் வைத்து குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளினால் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், மனிதக் கடத்தலில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் இதுவரை இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி)

# பிரபாகரன் வழியில் செல்லும் எதிர்க்கட்சி- பிரசன்ன சாடல்

(கொழும்பு)

ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரன் பின்பற்றிய கொள்கையை தற்போதைய எதிர்க்கட்சியினர் பின்பற்றுகிறார்கள் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், மக்கள் ஆணையுடன் ஆட்சிக்கு வர முடியாதவர்கள் போராட்டத்தை தூண்டிவிட்டு அதனூடாக இலாபமடைய முயற்சிக்கிறார்கள் என குற்றம் சாட்டினார்.

குறுகிய அரசியல் நோக்கத்துக்காக வன்முறைக்கு துணை சென்றதால் ஏற்படும் இறுதி விளைவை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ விளங்கிக்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஜனநாயக முறை ஊடாகவே முறைமை மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வன்முறை ஊடாக நிர்வாக மாற்றத்தை ஏற்படுத்த முற்பட்டார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதாரத்தை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் வகையில் போராட்டத்தை தூண்டிவிடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆசியக் கிண்ண டேபிள் டென்னிஸ்

# வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய வீராங்கனை



ஆசியக் கிண்ண டேபிள் டென்னிஸ் போட்டிகள் தாய்லாந்து நாட்டின் பாங்காங் நகரில் நடைபெற்றது. இத்தொடரில் முதல்முறையாக அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறிய இந்திய நட்சத்திர வீராங்கனை மணிகா பத்ரா தர வரிசையில் இரண்டாம் நிலையில் உள்ள ஜப்பான் வீராங்கனை மீமா இட்டோவை எதிர்கொண்டார்.

இதில் 2-4 என்ற செட் கணக்கில் மணிகா தோல்வியடைந்தார். இதையடுத்து நேற்று முன்தினம் நடந்த வெண்கல பதக்கத்திற்கான போட்டியில் உலகின் ஆறாவது நிலை வீராங்கனையான ஹினா ஹயாட்டாவை. மணிகா பத்ரா சந்தித்தார்.

இதில் 4-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்ற மணிகா, இந்த தொடரில் முதன்முறையாக பதக்கம் வென்ற இந்திய வீராங்கனை என்ற அபார சாதனையைப் படைத்தார்.

மேலும், 10,000 அமெரிக்க டொலர் பரிசும் அவருக்கு கிடைத்துள்ளது. இந்நிலையில் ஆசியக் கிண்ண டேபிள் டென்னிஸில் முதல் முறையாக பதக்கம் வென்ற மணிகா பத்ராவுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தார்.

இது தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில் வெண்கலம் வென்று ஆசிய கோப்பையில் இந்திய டேபிள் டென்னிஸ் வரலாற்றை எழுதியதற்காக மணிகா பத்ராவை வாழ்த்துகிறேன்.

அவரது வெற்றி இந்தியா முழுவதும் உள்ள பல விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் மற்றும் டேபிள் டென்னிஸை இன்னும் பிரபலமாக்கும் என பதிவிட்டுள்ளார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 450 | 450 | 400 | 450 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 140 | 180 | 200 |
| தக்காளி | 400 | 400 | 400 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 150 | 150 |
| கோவா | 400 | 250 | 280 | 300 |
| கரட் | 350 | 380 | 450 | 500 |
| பூசணி | 160 | 150 | 120 | 150 |
| புடோல் | 280 | 320 | 160 | 250 |
| வாழைக்காய் | 150 | 150 | 130 | 140 |
| சின்ன வெங்காயம் | 500 | 500 | 500 | 800 |
| பெரிய வெங்காயம் | 360 | 320 | 280 | 350 |
| பாகற்காய் | 600 | 450 | 450 | 500 |
| வெண்டிக்காய் | 180 | 140 | 150 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 110 | 150 | 160 |
| பயற்றங்காய் | 600 | 450 | 450 | 600 |
| லீக்ஸ் | 400 | 340 | 420 | 500 |
| பீற்றூட் | 260 | 300 | 300 | 400 |
| கறிமிளகாய் | 700 | 800 | 800 | 700 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 600 | 600 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 450 | 200 | 350 | 400 |
| கீரை - 1 பிடி | 140 | 160 | 150 | 200 |
| தேசிக்காய் | 300 | 350 | 300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 90 | 80 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 300 | 260 | 250 |
| வெங்காயப்பூ | 600 | — | 450 | 500 |
| முள்ளங்கி | 160 | 140 | 160 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 120 | 60 |
| வல்லாரை | 30 | 80 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | 120 | 100 | 120 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2734

**பிரதாப்**

நீங்கள் கல்யாணத்துக்கு முன்னாடி எந்தக் கடவுளை கும்பிடுவீங்க? விநாயகரை



கல்யாணத்துக்கு அப்புறம் அத ஏனப்பா கேக்குற வேண்டாத தெய்வமே இல்லை

**கோகுலன்**

காயமில்லாமல் கனவுகள் காணலாம்

ஆனால்

வலி இல்லாமல் வெற்றிகள்

காண முடியாது

**ரூபன்**

டேய் பேஸ்புக்லையே இருக்கியே உனக்கு வேலை இல்லையா?



நான் பேஸ்புக்ல இருக்குறதையே பார்த்துட்டு இருக்கியே உனக்கு வேலை இல்லையா

**சத்தியா**

மனைவி - வேலைக்காரி வராததால் வீடே சரியில்ல பாருங்க



கணவன்- அவள் வராததால் உனக்கு வீடுதான் சரியில்ல எனக்கு மனசே சரியில்ல

**கலைவாணி**

தேவைப்படும்

போது

தேடப்படுவாய்

அதுவரை நீ

அமைதியாய் இரு

**சர்மினி**



தனக்குனு ஒரு தனித் திமிரு எப்பவுமே இருக்கனும் இல்லன்னா வாறவன் போறவன் எல்லாம் ஏறி மிதிச்சிட்டு போய்ட்டே இருப்பாங்க

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரித உணவு விலை அதிகரிப்பால் குறைவடைந்த தொற்றா நோய்கள்

**(கொழும்பு)**

**சந்தையில் துரித உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பால் சிறுவர்களின் துரித உணவுப் பாவனை குறைந்துள்ளதாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊட்டச்சத்து பிரிவின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

துரித உணவுப் பாவனை குறைவடைந்துள்ள நிலையில்,

நீரிழிவு போன்ற தொற்றாத நோய்களால் பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை பாரியளவில் குறைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் ஊட்டச்சத்து மற்றும் உணவு கிடைக்கும் தன்மை குறித்த தரவுகளை சேகரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதி செய்யும் நோக்கில், இந்தத் தரவு சேகரிப்பு நடவடிக்கைகள் அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# போதை பாவனைக்கு எதிராக யாழில் ஆர்ப்பாட்டம்




(யாழ்ப்பாணம்)

மக்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. (நி)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 28 – 08 – 1992



இறப்பு 24 – 10 – 2022

**அமரர். பரராசசிங்கம் மோகீசன்**

(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்)

புதுக்குடியிருப்பு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட உயர்திரு பரராசசிங்கம் மோகீசன் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்கள் மற்றும் அனுதாபம் தெரிவித்து பல்வேறுபட்ட உதவிகள் செய்தோர் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். அத்துடன் 2022.11.23 அன்று புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு அமரரின் ஆன்ம ஈடேற்றத்திற்கு பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். (சி-5297)

4ம் வட்டாரம் கோம்பாவில், புதுக்குடியிருப்பு.
077 372 8944 , 075 065 6599

குடும்பத்தினர்.

# கிளைபோசெட் மீதான தடை நீங்குகிறது

(கொழும்பு)

கிளைபோசெட் மீதான தடையை நீக்குவது தொடர்பான வர்த்தமானியில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கையொப்பம் இட்டுள்ளார்.

இந்த வர்த்தமானி அரசாங்க அச்சகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க தெரிவித்துள்ளார்.

விவசாயப் பிரதிநிதிகள், விவசாய நிபுணர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் கருத்துகளை கேட்டறிந்த பின்னர் இந்தத் தடையை நீக்க அமைச்சர் தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

7 வருடங்களின் பின்னர், கிளைபோசெட் மீதான தடை நீக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தொழிலுக்காக வெளிநாடு செல்வோர் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு தொழிலுக்காக வெளிநாடு செல்பவர்களின் எண்ணிக்கை 150 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வருட ஜனவரி மாதம் முதல் 2 இலட்சத்து 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வேலை வாய்ப்பினை பெற்று பல நாடுகளுக்கு சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த வருட இறுதிக்குள் குறித்த எண்ணிக்கை 3 இலட்சமாக அதிகரிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.(நி)

# இராசிபலன்

21.11.2022
கார்த்திகை 05 , திங்கட்கிழமை
துவாதசி முற்பகல் 8.15 மணிவரை

சித்திரை முன்னிரவு 11.24 மணிவரை
சுபநேரம் -12.10-1.40 மணிவரை
இராகுகாலம் -7.40-9.10 மணிவரை

பிரதோச விரதம்
சந்திராஷ்டமம்
உத்திரட்டாதி,ரேவதி

வளவன்



**மேஷம்**: சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், உடல் நலன் சீராகும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.



**கடகம்**: புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.



**துலாம்**: தேக நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, மகிழ்ச்சி அதிகரித்து மன மாற்றம் காணும் நாள்.



**மகரம்**: உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.



**ரிஷபம்**: குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், . கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள்.



**சிம்மம்**: ஊக்கத்தோடும் உற்சாகத் தோடும் பணிபுரிவீர்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



**விருச்சிகம்**: எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும்.



**கும்பம்**: நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.



**மிதுனம்**: பிரியமான சிலரோடு மனம்விட்டுப் பேசுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.



**கன்னி**: சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், தொழில் வளர்ச்சிக்கு மங்கையர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.



**தனுசு**: நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான நாள்.



**மீனம்**: வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை, குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும்.

சமூகத்தைப் பற்றிக் கவலைப்படாதவர் மேகக் கேட்டில் உழன்று திரிவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு ஆளுநரை சந்தித்த ஐ.நா பிரதிநிதிகள்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்ட ஐ.நாவுக்கான சிறப்பு அதிகாரிகள் நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது எதிர்கால வடக்கு அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதுடன் வடக்கு அபிவிருத்திக்கு தமது தொடர்ச்சியான பங்களிப்பு இருக்கும் என ஐ.நா நிறுவனப் பிரதிநிதிகள் ஆளுநருக்கு தெரிவித்தனர்.

குறித்த சந்திப்பில் ஐ.நாவின் ஆசிய பசுபிக் பிராந்திய அரசியல் விவகாரங்களுக்கான தலைமை அதிகாரி பீட்டர் நிக்கோலஸ் டியு, இலங்கைக்கான ஐ.நா வதிவிட பிரதிநிதி ஹான சிங்கர் மற்றும் ஐக்கிய நாடுகள் நிறுவன அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-104)



நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் அமைப்பினரால் தமிழ் கலாசார பண்பாட்டு விழுமியங்களை இளைஞர்கள் மத்தியில் பரப்பும் வேலைத்திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட நிலையில் நேற்று நல்லூர் வீதியில் உள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் முதலாவது நட்பெழுச்சி நாள் ஆரம்பமாகியது.

(படம்:-சிவசாந்தன்)

# அச்செழு பகுதியில் கசிப்பு உற்பத்தி முறியடிப்பு

(அராலி)
அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அச்செழு பகுதியில் சட்ட விரோதமாக கசிப்பு உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த 29 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று காங்கேசன் துறை மாவட்ட விசேட குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இதன்போது அவரிடமிருந்து 20 ஆயிரம் மில்லிலீற்றர் கோடா, 7 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் போன்றனவும் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட பொருட்களுடன் சந்தேகநபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-104)



திருமறைக்கலாமன்ற இலக்கிய அவை மற்றும் மகிழ் வெளியீட்டகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த, அண்மையில் வெளிவந்திருந்த நவமகனின் "பொக்காளி" நாவல் குறித்த பேச்சும் உரையாடலும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை, கலைத்தூது அழகியல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

எழுத்தாளர் கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கலைமுகம் ஆசிரியர் எமில் தொடக்கவுரையை நிகழ்த்தினார்.

(படம்:சிவசாந்தன்)

# கல்விச்சாதனையாளர் கௌரவிப்பு விழா



வடக்கு மாகாண கல்வித் திணைக் கழத்தின் ஏற்பாட்டில் கல்விச் சாதனையாளர்கள் கௌரவிப்பு விழா நேற்று முற்பகல் 10 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் பிரதம செயலாளர் சமன் பந்துலசேன கலந்து சிறப்பித்தார். (நி-136)

# கோவிற்குடியிருப்பு அபிவிருத்தி சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)
தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோவிற்குடியிருப்பு (ஜே/301) கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் கோவிற்குடியிருப்பு கடற்கரை மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் லலிதசங்கர் தலைமையில் இடம்பெற்ற புதிய நிர்வாக சபைத் தெரிவில் தலைவராக மரிய பேர்னால்ட், செயலாளராக க.தர்சன், பொருளாளராக த.சுபேசன்,உப தலைவராக சரவணமுத்து,உப செயலாளராக பூமிசேகரம் மற்றும் கணக்கு பரிசோதகராக கபிலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். (நி-33)

# கொட்டடி கிராமத்தில் டெங்கு ஒழிப்பு திட்டம்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஜே/81 கொட்டடி மீனாட்சிபுரம் கிராமத்தில் டெங்குநோய் தாக்கம் அதிகரித்து வருவதனை கருத்தில் கொண்டு யாழ்.மாநகர சபையின் சுகாதார மருத்துவ அதிகாரியின் பணிப்புரையின் கீழ் பொதுமக்களின் பங்கேற்புடன் நேற்று டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது

குறித்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தில் கொட்டடி பகுதியைச் சேர்ந்த பெருமளவிலான மக்கள் பங்கேற்றதோடு இராணுவம், பொலிஸார் மற்றும் யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதார பிரிவு உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாண பிரதேச செயலர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அப்பகுதி கிராம உத்தியோகத்தர் எனப் பலரும் குறித்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தில் கலந்து கொண்டு டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவாக வீதியில் காணப்பட்ட புற்கள், குப்பைகளை அகற்றினர். (நி-33)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் மாதத்திற்கு பின்னரே க.பொ.த சா/த பரீட்சை

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் நடத்தப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இந்த அறிவிப்பை விடுத்தார்

சாதாரண தரப் பரீட்சையை அடுத்த வருடம் ஏப்ரலில் நடத்த எதிர்பார்த்தாலும், உயர்தரப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளமையால், மேலும் தாமதங்கள் தவிர்க்க முடியாதவை.

பல தரப்பினரின் கோரிக்கைகளை கருத்திற் கொண்டு உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்க தீர்மானித்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சை ஜனவரி 17ஆம் திகதி ஆரம்பமாகும் அதேவேளை புலமைப்பரிசில் பரீட்சை டிசெம்பர் 18 ஆம் திகதி நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# அடுத்த வருடம் முதல் அதிகரிக்கும் கட்டணங்கள்

## இலங்கை மக்களுக்கு மேலும் நெருக்கடி

(கொழும்பு)

அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் மின்சாரம், எரிபொருள், ரயில் மற்றும் பேருந்து கட்டணங்கள் 15 சதவீதம் அதிகரிக்கும் என்று நிதி அமைச்சின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கமைய கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும் அதற்கு முன்னர் வரி மீளாய்வு நடத்தி வற் இல் இருந்து விலக்கு பெறக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் தனித்தனியான தீர்மானம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதே நேரத்தில், புதிய வற் சட்டமும் அறிமுகப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது பெற்றோல் மற்றும் டீசல் வற் வரி விதிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி முதல் இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் மீது வற் வரி அமுல்படுத்தப்படும் என தெரிய வந்துள்ளது.

இது தவிர, தற்போது வற் இற்கு உட்பட்ட டீசல் மற்றும் பெட்றோல் மீது 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் கூடுதல் வரி விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதன் சதவீதம் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

எவ்வாறாயினும், புதிய வரிகள் விதிக்கப்பட்டுள்ளதால், எரிபொருள் விலை ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் அதிகரிக்கப்படவுள்ளது.

இதுவரை எரிபொருள், மின்சாரம், போக்குவரத்துத் துறைகளில் இருந்து வற் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக, ஆண்டுக்கு 1 சதவீதம் வருமானம் இழக்கப்படுவதாக வரவு-செலவு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.கு.ரவீந்திரன் (அதிபர்)

யா/வேலாயுதம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை

2022.11.20 நடைபெற்ற வடக்கு மாகாண சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வில் சிறந்த அதிபருக்கான "குரு பிரதிபா" கௌரவம் பெற்ற எமது பாடசாலையின் அதிபர் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம். (13506)


# கார்த்திகை மாத இராசி பலன்கள் 17.11.2022-15.12.2022

## துலாம்

**வழிபாடுகளில் நம்பிக்கை வைத்து வளர்ச்சி பெறும் துலாம் இராசி வாசகர்களே!**

தேவைக்கேற்ற வருமானம் வந்து சேரும். திட்டமிட்ட காரியங்கள் சிறப்பாக நடைபெறும். ஜென்மத்தில் கேதுவும், 7 இல் ராகுவும் இருப்பதால் திடீர் திடீரென முடிவுகளை மாற்றிக் கொள்வீர்கள். ஆரோக்கியத்தில் மட்டும் கூடுதல் அக்கறை செலுத்துவது நல்லது.

**சனி மற்றும் குருவின் சஞ்சாரம்**

அர்த்தாஷ்டமச் சனி வலிமையடைகிறது. அஷ்டமத்துச் சனியில் பாதிப் பங்கு வலிமை கொண்டது, அர்த்தாஷ்டமச் சனியாகும். எனவே ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டும். அடிக்கடி சிறு சிறு உபாதைகள் வந்துகொண்டே இருக்கும். சீரோடும் சிறப்போடும் வாழ நினைத்தாலும் செயற்படுவதில் தடைகள் ஏற்படும். பிறருக்கு செய்யும் நன்மை கூட அவர்களுக்கு தீமையாகத் தெரியும். பணிபுரியும் இடத்தில் பணப்பொறுப்பில் இருப்பவர்கள் மிகுந்த கவனத்தோடு இருப்பது நல்லது. "6 இல் குரு இருந்தால் ஊரில் பகை வரும்" என்பார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, பகை உணர்வு அதிகரிக்கும் நேரம் என்பதால், இந்த காலகட்டத்தில் பொறுமையையும் நிதானத்தையும் கடைப்பிடிப்பது நல்லது. குடும்ப உறுப்பினர்கள் உங்கள் மீது குறை சொல்ல வாய்ப்புண்டு. உத்தியோகத்தில் உங்கள் திறமைக்கேற்ற அங்கீகாரம் கிடைக்காது.

**தனுசு - புதன் சஞ்சாரம்**

கார்த்திகை 12 ஆம் திகதி, புதன் சகோதர - சகாய ஸ்தானத்திற்கு செல்லும்போது உடன்பிறப்புகள் வழியில் விரயம் ஏற்படலாம். அவர்களுடைய திருமணம் போன்ற சுபகாரியங்களை முன்னிட்டு பண உதவி செய்யும் சூழல் உருவாகும். சகோதரர்கள் கடல் தாண்டிச் சென்று வேலை செய்யவோ, பட்டப் படிப்பு மேற்கொள்ளவோ உதவி செய்யலாம். உத்தியோகத்தில் பணியிட மாற்றம் உருவாகும். உயர் பதவியை முன்னிட்டு குடும்பத்தை விட்டுப் பிரிந்து சென்று தொலை தூரங்களில் பணிபுரிய நேரிடலாம்.

**ரிஷப - செவ்வாய் சஞ்சாரம்**

கார்த்திகை 13 ஆம் திகதி, செவ்வாய் அஷ்டமத்தில் அடியெடுத்து வைப்பதால் பலவித பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். உடல்நலத்தில் தொல்லைகள் அதிகரிக்கும். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தினாலும் ஆரோக்கியத்தைச் சீராக்கிக் கொள்ள இயலாது. எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். உத்தியோகத்தில் உடன்பணிபுரிபவர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக இருக்க மாட்டார்கள். "இடமாற்றம் செய்யலாமா?" என்று சிந்திப்பீர்கள்.

**தனுசு - சுக்கிரன் சஞ்சாரம்**

கார்த்திகை 21 ஆம் திகதி சுக்கிரன். சகாய ஸ்தானத்திற்கு வரும் போது எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். கொடுக்கல் - வாங்கல்களில் இருந்த மந்த நிலை மாறும். பயணங்கள் பலன் தரும் விதம் அமையும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகள் உங்கள் கருத்துக்களை ஏற்றுக் கொள்வர். சுபசெலவுகள் அதிகரிக்கும். இம்மாதம் தினந்தோறும் விநாயகப் பெருமானை வழிபட்டு வருவதன் மூலம் வெற்றிகளை வரவழைத்துக் கொள்ளலாம்.

## விருச்சிகம்

**சந்தோஷத்தை நாளும் சந்திக்க வேண்டும் என்று விரும்பும் விருச்சிக இராசி வாசகர்களே!**

எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும். ஏற்றம் தரும் விதம் பொருளாதார நிலை உயரும். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும்.

**சனி மற்றும் குருவின் சஞ்சாரம்**

வெற்றிக்குரிய தகவல்கள் வீடு தேடி வரும். உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். உடன்பிறப்புகளும் உடனிருப்பவர்களும் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். தனவரவு தாராளமாக வந்து கொண்டேயிருக்கும். மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் மிகுந்த யோகம் உண்டு. குரு பார்க்க கோடி நன்மை என்பதற்கேற்ப, ஏராளமான நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரப் போகிறது. புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வரும். புகழ்மிக்கவர்களின் ஒத்துழைப்போடு பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கலாம்.

**தனுசு - புதன் சஞ்சாரம்**

தொழில் வளர்ச்சி மேலோங்கும். இலாபம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாகக் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். சொத்துக்கள் வாங்கும் வாய்ப்பு உண்டு. பணியில் இருப்பவர்களுக்கு நல்ல முன்னேற்றங்கள் வந்து சேரும். வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். நண்பர்கள் நல்ல தகவல்களைத் தருவர். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள்.

**ரிஷப - செவ்வாய் சஞ்சாரம்**

கார்த்திகை 13 ஆம் திகதி, சப்தம ஸ்தானத்தில் செவ்வாய் அடியெடுத்து வைப்பதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் வளம் மேலோங் கும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும். தைரியமும் தன்னம்பிக்கையும் கூடும். தொழிலை விரிவுபடுத்தும் முயற்சிக்கு எதிர்பார்த்த தொகை கிடைக்கும்.

**தனுசு - சுக்கிரன் சஞ்சாரம்**

கார்த்திகை 21 ஆம் திகதி சுக்கிரன் தன ஸ்தானத்திற்கு வரும்போது, விரயத்திற்கேற்ற தனவரவு உண்டு. எந்தக் காரியத்தையும் தொடங்கி விட்டால் அதற்குரிய தொகை வந்து சேரும். தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள். மாங்கல ஓசை மனையில் கேட்க வழிபிறக்கும். பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகளை முன்நின்று நடத்தி வைப்பீர்கள். புதிய வாகனம் வாங்கி மகிழும் யோகம் உண்டு. இம்மாதம் முருகப் பெருமானை முறையாக வழிபட்டு வருவதன் மூலம் முன்னேற்றத்தை வரவழைத்துக் கொள்ள இயலும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் சபை நிதி 2021,2022

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது சபை நிதியினை கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
02. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், யாழ்ப்பாணம் வடமாகாணம்,** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி திருத்த வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5** இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021-205 8867, தொலைநகல்: 021-205 8866)** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 16:00 மணிவரை 2022.11.21 ஆம் திகதியில் இருந்து 2022.12.04 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம்** அவர்களிடமிருந்து 2022.11.21 ஆம் திகதியிலிருந்து 2022.12.04 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணிக்கும் 14:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா **2000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 2022.12.05 ஆம் திகதி மு.ப 10:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வி, கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது.
10. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலி.கிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2022.11.28 ஆம் திகதி மு.ப.11:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி [illegible] செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(13)/2/Council/PII/2022/01 | நாவலடி வைரவர் வீதி, நாச்சிமார் வீதி 2ம் ஒழுங்கை திருத்தம், தம்பாலை | 2.09 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 21,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/02 | தையப்புல வீதி 3ம் ஒழுங்கை திருத்தம், கதிரிப்பாய் | 3.74 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 38,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/03 | போதிப்பிள்ளையார் வீதி திருத்தம், அச்சுவேலி தெற்கு | 3.89 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 39,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/04 | யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி 2ம், 5ம் உப ஒழுங்கைகள் திருத்தம், அச்சுவேலி தெற்கு | 5.17 | 90 நாட்கள் | C7 அல்லது C6 | 77 நாட்கள் | 52,000.00 | 2023.03.20 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/05 | வல்லை அராலி வீதி 2ம் ஒழுங்கை திருத்தம், அச்சுவேலி வடக்கு | 1.62 | 90 நாட்கள் | C9 அல்லது C8 | 49 நாட்கள் | 17,000.00 | 2023.02.20 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/06 | எல்லாளன் வீதி – சரஸ்வதி வீதி இணைப்பு வீதி திருத்தம் (குட்டி கடை முன் ஒழுங்கை), நவக்கிரி | 0.86 | 90 நாட்கள் | C9 அல்லது C8 | 49 நாட்கள் | 9,000.00 | 2023.02.20 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/07 | உலக்கை புலம் வீதி திருத்தம், ஆவரங்கால் மேற்கு | 3.99 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 40,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/08 | அரசடி வீதி திருத்தம், புத்தூர் கிழக்கு | 3.18 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 32,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/09 | கருமாரி அம்மன் வீதி திருத்தம், புத்தூர் வடக்கு | 4.54 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 46,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/10 | பூலன் வீதி, பூலசிட்டி வீதி திருத்தம், அச்செழு | 2.12 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 22,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/11 | விவசாய வீதி திருத்தம், சிறுப்பிட்டி | 3.60 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 36,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/12 | பெரிய பொக்கணை வீதி திருத்தம், வாதரவத்தை | 1.89 | 90 நாட்கள் | C9 அல்லது C8 | 49 நாட்கள் | 19,000.00 | 2023.02.20 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/13 | எல்லாளன் வீதி – சரஸ்வதி வீதி இணைப்பு வீதி உப ஒழுங்கை திருத்தம் (குட்டி கடை முன் ஒழுங்கை உப ஒழுங்கை), நவக்கிரி | 2.18 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 22,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/14 | பத்தாவத்தை வீதி திருத்தம், நீர்வேலி மேற்கு | 2.47 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 25,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/15 | மொனரப்புலம் வீதி திருத்தம், நீர்வேலி தெற்கு | 4.46 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 45,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/16 | நீர்வேலி கஷ்ணாகம் வீதி 6ம் ஒழுங்கை திருத்தம், நீர்வேலி வடக்கு | 2.44 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 25,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/17 | கரந்தன் வீதி உப ஒழுங்கை திருத்தம், நீர்வேலி தெற்கு | 1.64 | 90 நாட்கள் | C9 அல்லது C8 | 49 நாட்கள் | 17,000.00 | 2023.02.20 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/18 | பரலோக மாதா சேமக்காலை வீதி திருத்தம், நீர்வேலி வடக்கு | 1.40 | 90 நாட்கள் | C9 அல்லது C8 | 49 நாட்கள் | 14,000.00 | 2023.02.20 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/19 | பாலம் திட்ட குடிமனை வீதி திருத்தம், இருபாலை | 3.33 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 34,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/20 | புதிய செம்மணி வீதி திருத்தம், இருபாலை தெற்கு | 2.02 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 21,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/21 | அரசொல்லை வீதி திருத்தம், கல்வியங்காடு | 1.73 | 90 நாட்கள் | C9 அல்லது C8 | 49 நாட்கள் | 18,000.00 | 2023.02.20 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/22 | கிளுவானை வீதி திருத்தம், கல்வியங்காடு | 4.15 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 42,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/23 | வீரபத்திரர் முனிகோவில் வீதி 2ம் ஒழுங்கை திருத்தம், கோப்பாய் தெற்கு | 2.28 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 23,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/24 | பலாலி வீதி 3ம் ஒழுங்கை திருத்தம், ஊரெழு | 4.43 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 45,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/25 | வாலையடி நவசக்தி இணைப்பு வீதி திருத்தம், உரும்பிராய் வடக்கு | 3.09 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 31,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/26 | தம்பசிட்டி வீதி உப ஒழுங்கைகள் திருத்தம், உரும்பிராய் கிழக்கு | 3.27 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 33,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/27 | துவாரகை வீதி திருத்தம், உரும்பிராய் மேற்கு | 7.39 | 90 நாட்கள் | C7 அல்லது C6 | 77 நாட்கள் | 74,000.00 | 2023.03.20 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/28 | யாழ்ப்பாண வீதி 4ம் ஒழுங்கை திருத்தம், உரும்பிராய் மேற்கு | 2.02 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 21,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PIV/2021/01 | விமான நிலைய வீதி திருத்தம், பத்தமேனி | 7.00 | 90 நாட்கள் | C7 அல்லது C6 | 77 நாட்கள் | 70,000.00 | 2023.03.20 |
| NP/14/41(13)/2/Council/PIV/2021/02 | பகவான் வீதி திருத்தம், கோப்பாய் தெற்கு | 3.97 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 40,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PIV/2021/03 | வைராக்கண்டி வீதி திருத்தம், கோப்பாய் மத்தி | 3.21 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 33,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PIV/2021/04 | ஊரெழு 1ம் குறுக்கு வீதி 3ம் ஒழுங்கை திருத்தம், ஊரெழு | 3.04 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 31,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PIV/2021/05 | கற்பக பிள்ளையார் 3ம் ஒழுங்கை திருத்தம், உரும்பிராய் வடக்கு | 4.12 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 42,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PIV/2021/06 | மானிப்பாய் வீதி 3ம் ஒழுங்கை திருத்தம், உரும்பிராய் வடக்கு | 4.82 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 49,000.00 | 2023.03.06 |

**தியாகராஜா நிரோஷ்**
**தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர், யாழ்ப்பாணம்.**

**2022.11.21**

(C-5298)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையான கனவுகளில் இருந்துதான் பொறுப்புகள் ஆரம்பமாகின்றன.
- டயானா ஹைடன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எழுந்த அமைப்பை இழுத்து விழுத்தும் நாசகாரம் அழியாதவரை...

தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று தந்தை செல்வநாயகம் கூறிய வார்த்தை இன்னமும் உயிர்ப்போடு இருக்கிறது.

தனது நீண்ட அரசியலின் இறுதிப் பாகத்தில் தந்தை செல்வநாயகம் மேற்போந்த கருத்தை முன்வைத்தாரெனில், இனி எதுவும் செய்ய முடியாதென்ற வெறுப்பு நிலை அவரை அழுத்தியிருக்கின்றதென்ற முடிவுக்கு நாம் வரமுடியும்.

இங்கு தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற வார்த்தை நம் தமிழினத்தின் பலயீனம் கண்டு அவர் கூறியதாக இருக்க முடியுமேயன்றி, சிங்களப் பேரினவாதிகளின் போக்கினால் அவ்வாறானதொரு கருத்தை அவர் முன்வைத்தாரில்லை என்பதை தர்க்கரீதியாக நிரூபிக்க முடியும்.

பரவாயில்லை. தந்தை செல்வநாயகம் கூறிய பிரஸ்தாப வார்த்தை அப்படியே இருக்க,

நம் தமிழினத்தின் பலயீனம் பற்றிச் சிந்திப்பதுதான் தமிழினம் விமோசனம் பெறுவதற்கான ஒரே வழி.

அந்தவகையில் இன்றைய அரசியல் களநிலை குறித்து தமிழ் மக்கள் சார்ந்த அமைப்புகள் மற்றும் புத்திஜீவிகள், துறைசார் நிபுணர்கள் ஒன்றுகூடி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் நகர்வு குறித்தும் எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னதாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற அவரின் வாக்குறுதி குறித்தும் பிரஸ்தாபிப்பது கட்டாயமானது.

ஆனால் இதுவரை அப்படி எதுவும் நடந்தாகவில்லை.

குறைந்தது தமிழ் அரசியல் தரப்புகளை அழைத்து இப்படித்தான் எங்கள் வியூகம் இருக்க வேண்டும் என்று கூறுவதற்குக்கூட எங்களிடம் அமைப்பில்லை.

ஆனால் அதனைச் செய்வதற்கு யாரேனும் முன்வந்தால், ஐயா போதும். பொது அமைப்புகள், சிவில் அமைப்புகள், மரபுரீதியான அமைப்புகள், புத்திஜீவிகளின் சபைகள் என்று ஏராளம் அமைப்புகள் தாமாக அறிக்கைவிட்டு,

ஏலவே முன்வந்த அமைப்பை குழிவெட்டி முழுமையாகப் புதைத்துவிட்டு அமைதி கொள்ளும். இதுவே எங்கள் தலைவிதி.

ஆம், 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதி எழுகை பெற்ற தமிழ் மக்கள் பேரவை எழுக தமிழை, முத்தமிழ் விழாவை, இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை, ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் அரசியல் தரப்புகளின் கடமைப்பாட்டை விளக்கி நின்றபோது, எட்டுத்திக்கில் இருந்தும் தமிழ் மக்கள் பேரவையை நோக்கி அறிக்கை வடிவில் எறிகணைத் தாக்குதல் நடத்தி தமிழ் மக்கள் பேரவையை செயலிழக்க முயற்சித்தனர்.

இதில் வேதனை என்னவென்றால், சில புலம்பெயர் அமைப்புகள் மிகத் துல்லியமாகத் திட்டமிட்டு தங்கள் பிரதிநிதிகளை இங்கு அனுப்பி வைத்து பேரவையை மூச்சுத் திணறச் செய்தன.

அதற்கு பேரவையுடன் இணைந்திருந்த சிலரும் உறுதுணை புரிந்து தமிழ் மக்களின் பொது அமைப்பாக இருக்கக்கூடிய தமிழ் மக்கள் பேரவையை மௌனிக்கச் செய்தனர்.

ஆம், பேரவையை நசுக்குவதற்காக எழுதித் தள்ளியவர்கள், ஒன்றுகூடியவர்கள், நிபந்தனை விதித்தவர்கள் இப்போது எங்கென்றே தெரியவில்லை.

தமிழ் மக்களுக்காக எழுந்த பொது அமைப்பை இழுத்து விழுத்திய இப்பெரும் நாசம் என்று இல்லாது போகுமோ அன்றுதான் நம் தமிழ் இனத்துக்கு விடிவும் விடுதலையும் கிடைக்கப் பெறும்.

# பேருந்து கட்டணத்தை செலுத்த புதிய தானியங்கி முறைமை

(கொழும்பு)

பேருந்து பயணச் சீட்டுகளை வழங்குவதற்கான புதிய தானியங்கி முறைமையை அறிமுகப்படுத்தும் யோசனைக்கு மத்திய வங்கியின் ஆளுநர் அனுமதியளித்ததாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

பேருந்து கட்டணத்தை நிர்ணயம் செய்ய புதிய இலத்திரனியல் பணப்பை முறை அறிமுகப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பயணிகள் அனைவரும் தங்களின் வரவு அல்லது கடன் அட்டை மூலம் பேருந்து கட்டணத்தை செலுத்தக் கூடிய வங்கியிலிருந்து ஓர் இலத்திரனியல் பணப்பை அறிமுகப்படுத்தப்படும்.

இடங்களை அறிய, பேருந்துகளில் ஜிபிஎஸ் அமைப்பை அணுகும் திறன் கொண்ட புதிய மின்னணு சாதனங்கள் பொருத்தப்படும்.

பணம் செலுத்துவதற்கு, பயணிகள் தங்களது ஏறும், இறங்கும் வழிகளில் பொருத்தப்படும் புதிய சாதனங்களில் தங்கள் கடன் அல்லது வரவு அட்டைகளை வைக்க வேண்டும்.

நடத்துநர் இல்லாமல் பேருந்து இயக்கப்படும். குறித்த பேருந்துகளின் பின் கதவு மூடப்படும்.

பயணிகளிடம் வங்கி அட்டைகள் இல்லை என்றால், தமது பேருந்து கட்டணத்தை பணமாக செலுத்தி, ஓட்டுனர் அருகில் உள்ள பெட்டியில் வைப்புச் செய்யலாம். பேருந்து கட்டணம் உரிய பயணக் கட்டணத்துக்கு கிட்டிய கட்டணமாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், பேருந்து உரிமையாளரின் அனுமதியுடன், சாரதிக்கு உதவியாக ஒரு உதவியாளரை பணியமர்த்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தப் புதிய சாதனங்களை விநியோகிக்கும் செயற்பாடுகளுக்கு, இலங்கை மத்திய வங்கி ஒத்துழைப்பு வழங்கவுள்ளது.

புதிய கொடுப்பனவு முறைமை தொடர்பில் மத்திய வங்கி ஆளுநருக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

# கசிப்பு உற்பத்தி மூவர் கைது

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு மேற்கு பொக்கணை பகுதியில் நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் தாய், மகன் உள்ளிட்ட மூவர் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த ரகசிய தகவல் அடிப்படையில் நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த தாயும், மகனும் மற்றும் அவர்கள் வீட்டிற்கு அருகில் வசிக்கும் அயலவர் என மூவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 15 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். (4,7,33,104)

# வங்கி மேலதிகாரியை தாக்கியவருக்கு பிணை

(வவுனியா)

புளியங்குளம் ஏ9 வீதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற கார் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளிலில் பயணித்தவர் காலில் படுகாயமடைந்தார்.

காரை செலுத்தி வந்த பிரபல தனியார் வங்கியின் மேலதிகாரி, மோட்டார் சைக்கிளில் பயணித்து படுகாயமடைந்தவரை அம்புலன்ஸ் வண்டிக்கு அறிவித்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.

விபத்து இடம்பெற்றதனால் சம்பவ இடத்துக்கு பொலிஸார் வருகை தந்து விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஒத்துழைக்கும் வகையில் தனது காரை முன்நகர்த்தாமல் காத்திருந்தார்.

புளியங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கி அவர்கள் சம்பவ இடத்துக்கு வருகைதர தாமதமாகிய நிலையில் அந்த இடத்துக்கு மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இருவர் வங்கி மேலதிகாரியை தலைக்க வசத்தினால் கடுமையாகத் தாக்கியதுடன் காரையும் பெரும் சேதத்துக்கு உள்ளாகிச் சென்றனர்.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தருவதில் ஏற்பட்ட தாமதத்தினால் மீளவும் அந்த இடத்துக்கு வருகை தந்த அந்த இருவரும் வங்கி மேலதிகாரியின் மீதும் அவருடன் பயணித்தவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

அவ்வேளை வீதியினால் பயணித்த சிறப்பு அதிரடிப்படையினர் தாக்குதல்தாரிகளை தடுத்ததுடன் ஒருவரை தடுத்துவைத்தனர். மற்றையவர் அங்கிருந்து தப்பித்தார்.

வங்கி மேலதிகாரி தாக்குதலுக்குள்ளாகி வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில் தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் வவுனியா நீதவான் நீதிமன்றில் பதில் நீதிவான் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டார். கைகளால் தாக்குதல் நடத்தியதாக இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 314ஆம் பிரிவின் கீழ் பி அறிக்கையை தாக்கல் செய்த பொலிஸார் பிணை வழங்க ஆட்சேபனை தெரிவிக்காத நிலையில் அவருக்கு பிணை வழங்கப்பட்டது. (4-7)

# ஆட்சியாளர்களே நெருக்கடிக்கு காரணம்
## மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு ஆட்சியாளர்களே காரணம் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை அறிவுள்ளவர்கள் நிர்வகித்திருந்தால் நாடு இவ்வாறானதொரு நெருக்கடியில் சிக்கியிருக்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு எடுக்கப்படும் கடினமான தீர்மானங்களை மக்கள் புரிந்து கொள்வார்கள் என நம்புவதாகவும் ஆளுநர் கூறினார். (4-7)

# குடிநீர் சுத்திகரித்தல் செயற்பாட்டுத்திட்டம்

அருள் மிகு மானிப்பாய் பெரியதம்பிரான் ஆலயத்தின் சைவ பரிபாலன அறநெறி மன்ற மாணவர்களின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக சந்நிதி ஆச்சிரமத்தால் ஆலய வளாகத்தில் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான குடிநீர் சுத்திகரித்தல் திட்டம் இன்று செயற்படத்தப்படவுள்ளது என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (4-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** உடுவில், சங்குவேலி, கட்டுடை, SSR கட்டடத் தொகுதி-கட்டுடை, அரசடி, பிப்பிலி, சங்குவேலி, உடுவில் மகளிர் கல்லூரி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022

"மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப் பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை."

- ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

# மன்னாருக்கு கண்காணிப்பு விஜயம்





(மன்னார்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று காலை மன்னார் மாவட்டத்திற்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

மன்னார் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராய்வதும் அந்தப் பிரச்சினைகளுக்கு வழங்கக்கூடிய தீர்வுகள் குறித்து கலந்துரையாடுவதுமே ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் நோக்கம் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மன்னார் நகருக்குச் சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலில் மன்னார் ஒல்லாந்து கோட்டையின் புனரமைப்புப் பணிகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

அதன் பின்னர் நடுக்குடா கடற்றொழிலாளர் கிராமத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி, கடற்றொழிலாளர் சமூகத்தவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடியதுடன் அவர்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்தார்.

காற்றாலை மின் நிலையம் நிர்மாணிக்கப்பட்டு வரும் பிரதேசத்தையும் ஜனாதிபதி அவதானித்ததுடன் காற்றாலை மின் நிலையத்தின் எதிர்கால செயற்பாடுகள் குறித்தும் ஆராய்ந்தார். (நி-285)

## கிராஞ்சியில் 100 பயனாளிகளுக்கு பயன்தரு மரங்கள் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி கிராஞ்சி கிராமத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 பயனாளிகளுக்கு பயன்தரு பழ மரக்கன்றுகள் மற்றும் வீட்டுத் தோட்ட விதைப் பொதிகள் வழங்கப்பட்டன.

வேர் தேடும் விழுதுகள் அமைப்பின் ஏற்பாட்டில் கொடையாளர்களின் நிதிப் பங்களிப்பில் இந்தத் திட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைமுறைப்படுத்தப்பட்டது.

பூநகரிப் பிரதேச சபை உறுப்பினர் த.ஜெயசித்திரா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வேர் தேடும் விழுதுகள் அமைப்பின் இணைப்பாளர் கீர்த்தன், கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் அமுதன், பல்கலைக்கழக மாணவன் சனுசன், வேர் தேடும் விழுதுகளின் உறுப்பினர் சித்தி கிராஞ்சி பாடசாலை அதிபர் லதீஸ்குமார் மற்றும் கிராம அமைப்புக்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர். (நி-33)

## கலாசார சீரழிவுகளை தடுத்து நிறுத்துமாறு வவுனியா மக்கள் கோரிக்கை விடுப்பு

(வவுனியா)

வவுனியா பழைய பேருந்து நிலைய கட்டடத் தொகுதியில் இடம்பெற்று வரும் சட்டவிரோத சீரழிவுகளை தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இங்கு இடம்பெறும் கலாசார சீரழிவுகளால் தம்மால் நடமாட முடியவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்ததுடன் வர்த்தக நிலையங்களில் இளைஞர், யுவதிகள் பணியாற்ற முடியவில்லை என வர்த்தகர்களும் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தடுத்து நிறுத்தக் கடுமையான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொள்ள வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர். (நி-299)



வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள கிறிஸ்து அரசர் ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழா நேற்று ஆலயத்தின் பங்குத் தந்தை தலைமையில் இடம்பெற்றது. (படம்-, சதீஸ்)



ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக் கட்சியின் ஸ்தாபக தலைவர் தோழர் பத்மநாபாவின் 71 ஆவது பிறந்த தினம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை மன்னாரில் நினைவு கூரப்பட்டது. (படம்- ஜோசப்நயன்)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1982 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 06 சூரி 6 செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/13121 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 12 சூரி 10 செவ் 9 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியை<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி கொழும்பில் தொழில் செய்யும் ஆண்<br>தொ.இ:G/13155 |
| பிறப்பு:1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 32 சூரி.செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L(தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: அரச.தனியார் தொழில்<br>தொ.இ: B/13124 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 88 சூரி 9 செவ் 8 இல்<br>உயரம்:4'5"<br>தகைமை/தொழில்:A/L (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: நிரந்தரத் தொழில்<br>தொ.இ:G/13157 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா: சூரி 6 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்:O/L (பாதுகாப்பு உத்தியோகத்தர்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13125 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்:பூராடம் 4<br>கி.பா: 23 ¾ சூரி 11 செவ் 8 இல்<br>உயரம்: 154 cm<br>தகைமை/தொழில்: BSc பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: படித்த வெளிநாட்டு மணமகன்<br>தொ.இ:G/13160 |
| பிறப்பு: 1985 கிறிஸ்தவம் RC<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: சூரி 6 செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: சாரதி<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/13127 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 3<br>கி.பா: 25 சூரி 7 செவ் 10 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச. தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/13161 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடு திரும்பிய...

தெரிவித்துள்ளார்.

கண்டி கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

பசில் ராஜபக்ஷ அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பியுள்ளதால், நாட்டில் எந்த மாற்றமும் ஏற்படாது.

பசில் ஏற்கெனவே அமெரிக்காவில் இருந்து இலங்கைக்கு வரும்போது, அவர் வந்த பின்னர் அலாவுதீனின் அற்புத விளக்கை கொண்டு வந்தது போல் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என மொட்டுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்றத்தில் கூற ஆரம்பித்தனர்.

எனினும் எதுவும் நடக்கவில்லை. அவர் நிதியமைச்சரானதும், நாடு வங்குரோத்து அடைந்தது மட்டுமே நடந்தது. இதனால் மீண்டும் பசில் இலங்கை திரும்பியதால் எந்த மாற்றமும் ஏற்படாது எனத் தெரிவித்தார். (4-7)

## ஹெரோயினுடன்...

கிடைத்த ரகசிய தகவலை அடுத்து கொட்டடிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றினை சோதனையிட்டபோது 500 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் கொட்டடிப் பகுதியைச் சேர்ந்தவர் மூவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்

கைது செய்யப்பட்டவர்களுக்கு ஏற்கெனவே போதைப்பொருள் வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகவும், இவர்கள் மாதகல் பகுதியில் இருந்து போதைப்பொருளை வாங்குவதாகவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைக்காக மூவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளதோடு விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட உள்ளனர். (4-7,33)

## நீரில் மூழ்கி...

அன்ரனி மேரி (வயது-18) என்பவராவார்.

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் வாசித்த அவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கற்கோவளம் பகுதியில் உள்ள சகோதரியின் வீட்டுக்கு வந்திருந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நான்கு பேருடன் கற்கோவளம் கடற்பகுதியில் குளித்துக் கொண்டிருந்தபோது நீரில் மூழ்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

நீரில் மூழ்கியவரை அப்பகுதி மக்களின் உதவியுடன் மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் அவர் ஏற்கெனவே மரணம் அடைந்து விட்டதா தெரிவிக்கப்பட்டது.

சடலம் மரண விசாரணைக்காகவும் பிரேத பரிசோதனைக்காகவும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (4-7,60)

## யாழ்.பல்கலை...

மாவீரர் வாரம் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ள நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளது.

அந்தவகையில், பல்கலைக்கழக வளாகத்திலுள்ள மாவீரர் நினைவுத் தூபிப் பகுதி பல்கலைக்கழக மாணவர்களால் வர்ணம் தீட்டப்பட்டு புதுப் பொலிவு பெற்றுள்ளது.

பல்கலைக்கழக வளாகத்திலுள்ள மாவீரர் நினைவுத் தூபியைச்சுற்றி சிவப்பு, மஞ்சள் நிறத்திலான வர்ணக் கொடிகள் கட்டப்பட்டு மாவீரர் தின நிகழ்வுக்கான ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளது. (4-7,83)

## மூச்சுத்திணறல்...

குழந்தை ஏற்கெனவே உயிரிழந்திருப்பதாக வைத்தியர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கிராம்புவில் சாவகச்சேரியைச் சேர்ந்த சுஜீபன் ஹேஷ்மி என்ற பெண் குழந்தையே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

உயிரிழந்த சிசுவின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (4-7,30)

## தமிழ்க் கட்சி...

படுத்தப்பட்டு நடைபெறாமல்போன இந்தக் கூட்டத்தை புதிய திகதியில் ஒழுங்கு செய்யும் பொறுப்பு தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

அவர் 24ஆம் திகதி இக்கூட்டத்தை நடத்தும் ஒழுங்கு குறித்து கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் மற்றும் சுமந்திரன், சம்பந்தன், சி.வி.விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோருக்குத் தெரியப்படுத்தியுள்ளார் என அறியவந்துள்ளது. (4-7)

## கடல் அலையில்...

கடலுக்குள் இழுத்து செல்லப்பட்டுள்ளார்.

05ஆம் வட்டாரம் இரணைப்பாலை புதுக்குடியிருப்பினை சேர்ந்த 26 வயதுடைய செ.நிசாந்தன் என்ற இளைஞனே கடலில் இழுத்து செல்லப்பட்டுள்ளார்.

இவரை தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம்தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## கஞ்சா...

டுள்ளனர்.

இளவாலை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இளவாலைப் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்தவர்கள்என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளின்பின்னர் சந்தேகநபர்கள் இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (4-7,104)

## மாவீ...

தமிழீழ விடுதலைக்காய் உயிர் தியாகம் செய்த விடுதலைப் புலிகளை நினைவு கூரும் அஞ்சலிகள் நடைபெற்று வருகின்றன.

மாவீரர் நாளை அனுஷ்டிக்கும் வகையில் கார்த்திகை 21ஆம் திகதி மாவீரர் வாரம் ஆரம்பமாவது வழமை. அந்த வகையில் மாவீரர் வாரத்தில் பல்வேறுவிதமான நினைவுதின மற்றும் அகவணக்க நிகழ்வுகளில் ஈழத்தமிழர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்வர்.

கார்த்திகை 27ஆம் திகதி மாவீரர் தின இறுதி நிகழ்வுகள் உணர்வு பூர்வமான முறையில் இடம்பெறுவதுடன், மாவீரர்களின் உறவினர்கள், பெற்றோர், இனவிடுதலை உணர்வாளர்கள் எனப் பலரும் தமது அகவணக்கங்களை மாவீரர்களுக்கு வழங்குவர்.

இதேவேளை மாவீரர் வாரத்தை முன்னிட்டு வடக்கு கிழக்கில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் துப்புரவு செய்யப்பட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் செய்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 20/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1400
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 3 1 9 7 6 8
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2022.11.20
சீட்டிழுப்பு இலக்கம் - 975
F 42 44 64 71
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2022.11.20
சீட்டிழுப்பு இலக்கம் 3187
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
T 03 07 16 80
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 20/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1293
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
L 01 07 12 13 56

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.20
சீட்டிழுப்பு இலக்கம் 254
தனுசு 34 36 38 41 தனுசு
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/11/20
சீட்டிழுப்பு இலக்கம் 4945
ஆங்கில எழுத்து வெற்றிபெற்ற இலக்கங்கள்
S 0 3 3 9 2 4
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1920 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.11.20 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,504,080/-
D 15 28 73 76
3713 712

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.11.20
சீட்டிழுப்பு இல : 4081
வர்ணம் : இளஞ்சிவப்பு
ரூ. 3,033,980/-
வெற்றி இலக்கங்கள்
09 26 37 65 V

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 251
சீட்டிழுப்பு திகதி 2022.11.20 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 06 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,928,140/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,711,888.80
திகதி 2022-11-20
வெற்றி வாரம் 3632
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 09 25 49 62 விருச்சிகம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 7,079,240/-

வாராந்த 27
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 09 06 31 46 66
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1096
வர்ணம் மஞ்சள்
திகதி 2022.11.20 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 278,917,091.80
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1746
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2022 11 20
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,092,480/-
அத கோடிபதி ADA KOTIPATHI
வெற்றி இலக்கங்கள் 26 54 55 66 H

வெல்லப்பட்டது அதிர்ஷ்டம்
நாகபூசணி அம்மன் அருளுடன்
கனகலிங்கம் திலகவதி
யாழ்.முகவர் ஊடாக NLB
ஜாதிக சம்பத லொத்தரின்
முதல் பரிசான (10 இலட்சம்)
1,000,000 யாழ்.நகரில்
வெல்லப்பட்டுள்ளது என்பதை
அறியத் தருகின்றோம்.
கனகலிங்கம் திலகவதி
இல.4, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்
(C-5300)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

- நல்லூர் கோவில் முன் வீதியில் 3 பரப்புடன் 5 அறைகள் கொண்ட வீடு.
- மருதனார்மடம் புகையிரத கடவைக்கு அண்மையில் வீதி அருகில் 4 பரப்பு காணி.

தரகர் தேவையில்லை. (13515)

**076 105 6343**
**077 261 4549**



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13514)

**076 825 7716** (ஆகாஸ்)


# நால்வர் கைது

(கொழும்பு)

ருமேனியாவில் தொழில் வழங்குவதாக சமூக ஊடகங்கள் மூலம் விளம்பரம் செய்து, நேர்முகப் பரீட்சை நடத்திய வெளிநாட்டவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பதுளை பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த போதே குறித்த குழுவினர் கைது செய்யப்பட்டதாக அதிகாரி மேலும் தெரிவித்தார். (4-7)

# சங்கீத வித்துவான் ஏ.கே. கருணாகரன் காலமானார்




(யாழ்ப்பாணம்)

புகழ்பூத்த சங்கீத வித்துவான் ஏ.கே.கருணாகரன் நேற்று முன்தினம் கொழும்பில் காலமானார்.

மட்டக்களப்பு விபுலானந்த இசைக் கல்லூரியின் விரிவுரையாளராகக் கடமையாற்றிய அவர் இசைத் துறைக்கு பெரும் சேவை யாற்றியுள்ளார்.

அவரின் மறைவுக்கு யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருத துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பாலகைலாசநாதசர்மா உட்பட பலரும் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளனர். (4)

## கண்ணீர் அஞ்சலி



எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் திரு.ஞா.கஜுரன் அவர்களின் அன்பு மாமனார்

அமரர்
**லயன் அருணாச்சலம் மகேஸ்வரன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 10.02.1944 | இறப்பு 19.11.2022

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம் (13517)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (13513)



## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தை அண்மித்த பகுதியில் இயங்கும் தேநீர் கடை ஒன்றிற்கு உதவியாளர் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு (13520)

**074 041 7530**



## மணமகள் தேவை

1978 இல் பிறந்த கேட்டை நட்சத்திரம் 11 இல் சூரியன் செவ்வாய் உடைய இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சுயதொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. (13520)

தொடர்புகளுக்கு

**075 617 8008**



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை (13518)

தொடர்புகளுக்கு - ஜெயம்

**077 814 7389, 077 986 5457**


## மரண அறிவித்தல்

### திருமதி முத்துராசா அன்னம்மா (மணி)

பிறப்பு 07.11.1948 | இறப்பு 20.11.2022



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஊரெழு கிழக்கு நாவலம்பதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துராசா அன்னம்மா அவர்கள் நேற்று (20.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்புராசா - பாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற கணபதி - பொன்னம்மாள் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முத்துராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் நடராசா, சண்முகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ராசா மற்றும் துரைராசா, தவமணி மற்றும் காலஞ்சென்ற தங்கராசா, இராசையா, செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் மலர்ராணி, வில்வராசா, சத்தியராசா, வசந்தராணி (கனடா), வசந்தராசா (கனடா), சூகுனராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சந்திரன் மற்றும் பிரவீனா, வினோதினி, மோகன் (கனடா), விதுசிகா (கனடா), சைலேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்வம், காலஞ்சென்ற சந்திரமதி, காலஞ்சென்ற ரத்தினம், சறோஜாதேவி, காலஞ்சென்ற தங்கவேல் ஆகியோரின் சகலியும் சீதன், ஜெனதன் (பிரான்ஸ்), சுகந்தன் (கனடா), சச்சின், விவர்சிகா, சங்கீதன் (சுவிஸ்), தாட்சா (சுவிஸ்), அர்ச்சுன் (கனடா), ஐங்கரன் (கனடா), சரவணன். (கனடா), வர்ச்சின் (கனடா), செரோமி (கனடா), சஞ்சை, பரத், அக்சயா (பிரான்ஸ்), கனீஸ்ரா (பிரான்ஸ்), சாய்ராம் (பிரான்ஸ்) ஆகியோரின் பேத்தியும் கார்த்தீகன், ஜெனீஸா (பிரான்ஸ்), சருதீகா (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2022) பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வளர்பிறை,
ஊரெழு கிழக்கு. (13521)

*தகவல்:*
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

### முத்துராசா அன்னம்மா (மணி)

தோற்றம் 07.11.1948 | மறைவு 20.11.2022



கோண்டாவில் வடக்கில் பிறந்து ஊரெழு கிழக்கில் இல்லறம் புகுந்து இனிதாக வாழ்ந்து வந்த மணி என்று செல்லமாக அழைக்கப்பட்டு வந்த **அன்னம்மா** அவர்கள் நேற்று காலமாகிய செய்தி கேட்டு கதிகலங்கி நிற்கின்றோம்.

ஊரெழு கிழக்கு நாவலம்பதி ஞானவயிரவர் திருக்கோவிலின் அலங்கார உற்சவத்தில் ஆறாம் திருவிழாவை உபயமாக நடாத்திவருகின்ற அவர்களின் இழப்பு தாங்கமுடியாத கவலையைத் தருகின்றது. அன்னாருக்கு இதயம் நிறைந்த கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நாவலம்பதி ஸ்ரீ ஞானவயிரவப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பரிபாலன சபை,
ஊரெழு கிழக்கு, நாவலம்பதி, ஞானவயிரவர் திருக்கோவில் (13522)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.